வெல்ல (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணை

* 690 கேள்வி.—திரு. எல். ஆனந்தன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சர்க்கரை ஆலைகளுக்குப் போதுமான கரும்பு கிடைப்பதால் Gur (Movement Control) Order 1963-ஐ ரத்து செய்யும் உத்தேச முண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த உணவு-வேளாண்மை அமைச்சு (உணவுத் துறை), 1962-ம் ஆண்டு இந்தியப் பாதுகாப்பு விதிகளின்கீழ் 1963-ம் ஆண்டு வெல்ல (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணையைப் பிறப்பித்தது. எனவே, மாநிலங்களிடையே வெல்லப் போக்குவரத்து மீதுள்ள தடையை எடுப்பதுபற்றி மத்திய அரசாங்கமே முடிவு செய்யவேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், வெல்லப் போக்குவரத்தைத் தடை செய்வது சாதாரணமாக சர்க்கரை ஆலை அல்லாத மற்ற பகுதிகளில் கரும்பு உற்பத்தி செய்யாதவர்களை பாதிக்கிறது என்பதற்காக ஏற்பட்டது. கரும்பு உற்பத்தி செய்கிற பகுதியில் சரியான பாதுகாப்பு இருப்பதால் இந்தத் தடையை நீக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இது மத்திய அரசாங்கம் செய்ய வேண்டிய முடிவு என்று சொன்னேன். என்ன செய்வேண்டுமென்பதைப் பற்றி அவர்கள் தான் முடிவு எடுக்கவேண்டும்.

கிராம ஊழியர்களின் ஊதிய உயர்வு

* 691 கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம் : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிராம ஊழியர்களான தலையாரி, தண்டல்காரன் இவர்கள் ஊதியத்தை உயர்த்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : The matter is under the consideration of the Government.

தஞ்சை மாவட்ட கிராம அதிகாரிகள்

* 692 கேள்வி.—திரு. செ. மாதவன் :
திரு. கோ. சி. மணி :
திரு. கரு. சீமைச்சாமி :
திரு. து. ப. அழகமுத்து :
திரு. ஆ. கு. சுப்பையா :
} கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கிராம அதிகாரிகள் தங்கள் பதவியை ராஜிநாமா செய்தனரா ?

24th July 1964]

(இ) ஆமெனில், ராஜிநாமாவிற்குக் காரணங்கள் யாவை?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Certain Village Officers of Thanjavur District have tendered their resignations to the Collector of Thanjavur.

(*b*) Their request for further increased emoluments is sitll under the examination of the Government.

திரு. செ. மாதவன் : *இந்த கிராம அதிகாரிகளுடைய நிலைமையை நிர்ணயிப்பதற்கும், அவர்கள் ஊதியத்தை உயர்த்தவும் சர்க்கார் ஒரு காபினெட் சப்-கமிட்டி போட்டு ஆலோசித்ததா? அதனுடைய முடிவு என்ன? எத்தனை ஆண்டுகளாக இதைப் பற்றி ஆலோசித்து வருகிறது?*

கனம் திரு. வெ. ராமைய்யா : *இதைப் பற்றி பட்ஜெட் விவாதத்தின் போது விரிவாகச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் மீண்டும் சொல்லுகிறேன். இந்த கிராம அதிகாரிகளுடைய நிலையைக் குறித்து விரிவாக விசாரணை செய்ய காபினெட் சப்-கமிட்டி ஏற்பாடு செய்து, முடிவு எடுத்து, அதைப் பரிசீலிக்க அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் நேரத்தில் புது பஞ்சாயத்து ராஜ்யச் சட்டமும் நிறைவேறி பஞ்சாயத்து ஆட்சி முறை அமலுக்கு வந்தபோது இரண்டுக்கும் இடையில் ஏதாவது முரண்பாடு இருக்கிறதா என்று ஆலோசிக்கும் அடிப்படையில் ஒத்தி வைத்திருக்கிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. குறிப்பாக ஊதிய உயர்வு ஏற்படுவதற்கு விரைவாக முடிவு எடுக்கவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.*

திரு. ஆ. கு. சுப்பையா : *ஸார், இந்த ராஜிநாமா செய்த கிராம அதிகாரிகளுக்கு குறிப்பிட்ட தேதிக்குள் வாபஸ் வாங்கவேண்டும் என்று சொல்லி அரசாங்கத்திடமிருந்து மிரட்டல் கடிதம் அனுப்பப் பட்டது உண்மையா?*

கனம் திரு. வெ. ராமைய்யா : *மிரட்டல் கடிதம் ஒன்றும் இல்லை.*

திரு. கரு. சீமைச்சாமி : *ஸார், எத்தனை கிராம அதிகாரிகள் ராஜிநாமா செய்தார்கள் என்று அமைச்சர் சொல்ல முடியுமா?*

THE HON. SRI V. RAMAIAH :

Details of persons who tendered the resignations.

Name of the taluk. (1)	Karnam. (2)	V. H. M. (3)	Talayari (4)	Vetti. (5)
1 Pattukkottai ..	104	75	14	28
2 Nannilam	222	182	125	239
3 Thanjavur .	42	40	36	65
4 Thiruthuraipundi ..	69	52	..	..
5 Mayuram ..	3	1	..	...
6 Kumbakonam ..	103	76	..	..
7 Mannargudi ..	18	12	..	...
8 Orthanad	71	46	..	..
Total ..	632	484	175	332

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : ஸார், கிராம அதிகாரிகளின் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது என்பதை அமைச்சர் உணருகிறார்களா ? அதை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : அதற்குத் தான் இப்போது கனம் அமைச்சர் பதில் சொன்னார்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நல்லதையே செய்யும் நமது அரசாங்கம் காலதாமதங்கள் செய்து எல்லோருடைய அதிருப்தியைப் பெற்றதற்கு மேல் செய்வதில் என்ன பிரயோசனம் இருக்கிறது. கூடிய விரைவில் இதற்கு முடிவு கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் சபாநாயகர் : இது கேள்வி அல்ல. ஆலோசனையை அமைச்சருக்குத் தனியாக கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பலாம்.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகளுக்குப் பெரிய வட்டங்களாக இருக்கிற காரணத்தினால் வேலை அதிகமாக இருக்கிறது என்று அரசாங்கம் உணருகிறதா ? பெரிய வட்டங்களை சிறு வட்டங்களாகப் பிரிக்க என்ன என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதற்குத் தனியாக ஒரு கேள்வி போடவேண்டும்.

கனம் சபாநாயகர் : மாவட்டம், வட்டம், உள் வட்டம் என்றெல்லாம் சொல்லப்படுகிறதே, இந்த இடத்தில் வட்டங்கள் என்றால் என்ன அர்த்தம் ?

திரு. ஆ. துரையரசன் : வட்டம் என்றால் குரூப் வில்லேஜ்கள்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், ராஜிநாமா செய்ததில் ஸ்டேஷனரி ஃபாரம் சப்ளை செய்யவில்லை என்று காரணம் காட்டியிருக்கிறார்கள். இது விஷயத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து காலாகாலத்தில் ஸ்டேஷனரி ஃபாரங்கள் சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்கள் சொன்ன பல காரணங்களில் ஸ்டேஷனரி சப்ளையும் ஒரு காரணமாக இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் உள்ள கிராம அதிகாரிகளுக்கும் உள்ள பிரச்னை தான். இதில் போதுமான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. ரா. சுப்பிரமணியம் : ராஜிநாமா செய்த கிராம அதிகாரிகள் இப்போது வாபஸ் வாங்கி விட்டார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? எல்லோரும் ராஜிநாமாவை வாபஸ் வாங்கி விட்டார்களா ? இன்னும் வாபஸ் வாங்காதவர்கள் பாக்கி இருக்கிறார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எனக்குக் கிடைத்த தகவல் எல்லோரும் மீண்டும் வேலைக்கு வந்து விட்டார்கள் என்பது தான்.